# பிரதமர் மோடியை மீண்டும் சந்திக்கத் தயார்!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி!

ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறையால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள காரணங்கள் பொருத்தமற்றவை என்றும், 'மெட்ரோ இரயில் கொள்கை 2017'ல் குறிப்பிடப் பட்டுள்ளதைப் போன்று, 20 இலட்சம் மக்கள் தொகை என்ற அளவுகோல் இதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்றாகக் குறிப்பி டப் பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கோயம் புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதியின்படி அதன் மக்கள் தொகை 2011ஆம் ஆண்டிலேயே 20 இலட்சத்தைத் தாண்டியிருந்தது என்றும், மதுரையிலும் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகையை விட அதிகமாக இருக்கும் என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த 20 இலட்சம் என்ற அளவுகோல் ஒரேமாதிரியாகக் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால், ஆக்ரா, இந்தூர் மற்றும் பாட்னா போன்ற இரண்டாம் நிலை நகரங்களில் மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேறியிருக்க வாய்ப்பில்லை என்பதையும் அவர் தனது கடிதத்தில் சுட்டி க்காட்டியுள்ளார்.

இந்த அளவுகோலை கோவை மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்குச் சுட்டிக்காட்டுவது என்பது, எங்களது இந்த நகரங்களுக்கு எதிரான ஒன்றிய அரசின் பாகுபாட்டு நிலையையே காட்டுவதாகவும், எனவே ஒன்றிய அரசு மற்ற மாநிலங்களில் மேலே குறிப்பி டப்பட்ட நகரங்களில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்திட மேற்கொண்ட முடிவினைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள இந்த மாநகரங்களிலும் செயல்படுத்திட ஏதுவாக இந்த அளவுகோலை நீக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கருத்தில் கொள்ளாத பிரதமர்!**

மேலும், கோயம்புத்தூர் நகரில் இந்தத் திட்டத்திற்கான பயணிகளின் அடர்வு எண்ணிக்கை, சென்னையில் உள்ள பயணிகளின் அடர்வு எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும், பயணிகளின் எண்ணிக்கை என்பது பல காரணிகளைச் சார்ந்திருப்பதால் இது பொருத்தமானதல்ல என்றும் கோடிட்டுக் காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த இரண்டு நகரங்களும் சென்னையிலிருந்து வேறுபட்ட பயண முறைகளைக் கொண்டுள்ளன என்றும், விரிவான போக்குவரத்து ஆய்வுகளுக்குப் பிறகு RITES தயாரித்த கோயம்புத்தூருக்கான விரிவான இயக்கத் திட்டம், முன்மொழியப்பட்ட துறைகளில் மெட்ரோ இரயில் பயணத்தின் தேவையைத் தெளிவாகக் கணித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுரைக்கும், 2011ஆம் ஆண்டின் விரிவான இயக்கத் திட்டத்தில், 'பொதுப் போக்குவரத்து அமைப்பு' (BRT) முன்மொழி யப்பட்டதாகவும், ஆனால் பெரும்பாலான பாதைகளின் நீளம் உயர்த்தப்பட வேண்டியிருப்பதால், இரயில் போக்குவரத்திற்கான அமைப்பையும் பரிசீலிக்கலாம் என்று அதில் தெளிவாகக் குறிப்பி டப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

மேலும், விரிவான திட்ட அறிக்கை ஆய்வுகள் போக்குவரத்துக் கணிப்புகளின் அடுத்தடுத்த, தனிப்பட்ட மதிப்பீடுகளைச் செய்துள்ளன என்றும், இது மெட்ரோ இரயில் வழித் தடங்களின் தேவையை நியாயப்படுத்தியது என்றும், இந்தக் காரணிகள் போதுமான அளவு கருத்தில் கொள்ளப்படவில்லை என்றும் அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**நிலம் கிடைப்பதிலும் தடையில்லை!**

மெட்ரோ இரயில் வழித்தட உரிமையைப் பொறுத்தவரை, இந்தியாவின் பெரும்பாலான நகரங்களில் இத்திட்டங்களுக்குத் தனியார் நிலங்களைக் கையகப் படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று என்றும், நிலம் கையகப்படுத்துவதால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளை, மெட்ரோ இரயில் திட்டங்களின் நீண்டகால சமூக, பொருளாதார நன்மைகளுடன் சமநிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை தாங்கள் முழுமையாக உணர்ந்துள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் தற்போதைய திட்டத்தில் நில உரிமையாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில், இழப்பீட்டை தாங்கள் வழங்கி வருவதாகவும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் முன்மொழி யப்பட்ட மெட்ரோ இரயில் திட்டங்க ளுக்கு நிலம் கிடைப்பது என்பது ஒரு தடையாக இருக்காது என்பதை தமிழ்நாடு அரசு உறுதி செய்யும் என்றும் அவர் உறுதிபடத் தெரிவித் துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் எழுப்பியுள்ள ஐயங்களுக்கு உரிய, விரிவான விளக்கங்களைச் சமர்ப்பிக்க, 'சிறப்பு முயற்சிகள் துறை'க்கு தான் அறிவுறுத்தியுள்ளதாகவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில், மதுரை மற்றும் கோவை மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான கருத்துருவைத் திருப்பிய னுப்பும் முடிவை மறு பரிசீலனை செய்ய சம்பந்தப்பட்ட அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளதுடன், தேவைப்படின் இத்திட்டங்கள் குறித்து விரிவான விளக்கம் அளிக்க தமது குழுவுடன் புது டெல்லியில் இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்திக்க தயாராக இருப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித் துள்ளார்.

மேலும், இந்த இரண்டு திட்டங்களும் தமிழ்நாட்டின் தொழில்துறை மற்றும் கலாச்சார மையத்தினை உள்ளடக்கியது என்பதைக் கருத்தில் கொண்டு, தனிப்பட்ட முறையில் இந்த விவகாரத்தில் இந்திய பிரதமர் அவர்கள் தலையிட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2025) உடல்நலக்குறைவால் இயற்கை எய்திய கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழுக்கு வளம் சேர்த்த

# கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, நவ. 24 -

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டிலும் சிறந்து, தமிழுக்கு வளம் சேர்த்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்கிற ந.செகதீசன் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடன் பத்தாண்டுகள் நெருங்கிப் பழகிய சிறப்புக்கு ரியவர் ஈரோடு தமிழன்பன். சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளர், பேராசிரியர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர், அறிவியல் தமிழ் மன்ற உறுப்பினர், அரிமா நோக்கு இதழின் ஆசிரியர் எனப் பல்வேறு பொறுப்புகளில் அவர் ஆற்றிய பணிகளும் எழுதிய நூல்களும் ஏராளம்.

தமது இடையறாத தமிழ்ப் பணிகளுக்கு அங்கீகாரமாகக் கலைமாமணி, சாகித்ய அகாதெமி, பாரதிதாசன் விருது, சிறந்த நூலுக்கான தமிழ்நாடு அரசின் விருது, குறள்பீட விருது, முரசொலி அறக்கட்டளையின் கலைஞர் விருது, கவிக்கோ விருது என எண்ணற்ற விருதுகளைப் பெற்று அவற்றுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள்.

நமது திராவிட மாடல் ஆட்சிக்கு வந்ததும், 2022ஆம் ஆண்டு முத்தமிழறிஞரின் பிறந்தநாளில் கனவு இல்லம் திட்டம் திட்டத்தின் கீழ், அவருக்கு



அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடு வழங்கியிருந்தோம். மேலும், அவர் இயற்றிய 'கீழடியில் கேட்ட தாலாட்டுகள்', 'நெருக்கடி நேரத்தில் கலைஞரோடு (கவிதைகளும் கட்டுரைகளும்) ஆகிய நூல்களையும், வட அமெரிக்க ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை தயாரித்துள்ள, ஈரோடு தமிழன்பன் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த "மகாகவி" என்ற ஆவணப் படத்தையும் முதலமைச்சராக வெளியிடும் பேற்றினைப் பெற்றிருந்ததை இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

இறுதிக்காலம் வரையிலும் பல வகைமைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய, நீண்ட நெடிய பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான கவிஞர் ஈரோடு தமிழன்பனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித் துள்ளார்.

விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசைக் கண்டித்து இன்று

# திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*திருவாரூர், நவ. 24 -*

தமிழ்நாட்டு விவசாயிகளை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசினைக் கண்டித்து திருவாரூரில் இன்று (24.11.2025 - திங்கள்கிழமை) நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

இந்தியா துணைக்கண்டமே வியந்து பாராட்டும்படி ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவண்ணம் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தும் திராவிட நாயகர் - முதல்வர் அவர்களின் நல்லாட்சியில் தீட்டப்பட்டு மக்களுக்கு தரப்படும் நல திட்டங்களை, பி.ஜே.பி. உள்ளிட்ட ஆட்சியாளர்களும் கூட தங்களது மாநிலங்களிலும் அமல்படுத்தும் கழகத்தின் பொற்கால ஆட்சியில், வேளாண் நலத்திட்டங்களாலும், உரிய நேரத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டது முறையான தூர் வாரும் பணிகள் நடைபெற்று, விவசாய மேம்பாட்டு ஆலோசனைகளாலும் தமிழ்நாட்டில் முன் எப்போதும் இல்லாத வகையில் நெல் உற்பத்தி பன்மடங்கு உயர்ந்து இந்த ஆண்டு சாதனை படைத்துள்ளது.



இதனால் விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் விவசாய ஆர்வலர்களும், பொதுமக்களும் மகிழ்ச்சியில் இருந்தனர். இதனை பொறுத்துக்கொள்ள முடியாத மோடி தலைமையிலான ஒன்றிய பி.ஜே.பி. அரசு தமிழ்நாட்டிற்கு பல்வேறு வகையில் நெருக்கடிகளை கொடுத்து ஜனநாயக விரோத அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டது. அதனை தனது மக்கள் ஆதரவுடன் தனது உயரிய செயல்பாடுகளால் முறியடித்து தமிழ்நாட்டை வளர்ச்சிப்பதையில் முதல்வர் தளபதி அவர்கள் கொண்டு செல்கிறார்.

தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி பன்மடங்கு அதிகமான நிலையில் வடகிழக்கு பருவமழையின் தாக்கத்தால் ஈரப்பதம் அடைந்து நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரப்படுகிறது. இதனால் விவசாயிகளின் நெல் கொள்முதலில் பாதிப்பு அடைய கூடாது என்கிற நல்லெண்ணத்தோடு ஈரப்பத கட்டுப்பாடுகளை கைகளில் வைத்திருக்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசிடம் கொள்முதல் ஈரப்பதத்தை 22 சதவீதமாக உயர்த்தி தரும்படி தளபதி அவர்களின் தலைமையிலான கழக அரசு கோரிக்கை வைத்தது.

ஆனால் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியை வீழ்த்த முடியவில்லை என்பதால் விவசாயிகளுக்கு துரோகம் செய்யும் நோக்கத்தோடு நெல் ஈரப்பதத்தை உயர்த்த ஒன்றிய பி.ஜே.பி. அரசு மறுப்பதோடு, விவசாயிகளுக்கு தரவேண்டிய மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான இழப்பீட்டு தொகையையும் தராமல் வஞ்சித்து வருகிறது.

முதல்வர், திராவிட நாயகர், கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுத்தல்களின் படி ஒன்றிய பி.ஜே.பி. அரசின் இந்த மக்கள் விரோத, விவசாய விரோத செயல்பாடுகளைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் திருவாரூரில் இன்று (24.11.2025 - திங்கள் கிழமை) காலை 10 மணியளவில் திருவாரூர் ரயில் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் விவசாய ஆர்வலர்களும், கழக நிர்வாகிகளும், கழகத் தோழர்களும், பொதுமக்களும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழர்களும் பெருமளவில் பங்கேற்று ஒன்றிய பி.ஜே.பி. அரசின் விவசாய விரோத கொள்கைகளுக்கு எதிராக குரல்கொடுப்போம் என அழைக்கிறேன்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈரோடு மத்திய மாவட்டம்

# ஊத்துக்குளி தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

ஈரோடு மத்திய மாவட்டம், ஊத்துக்குளி தெற்கு ஒன்றியச் செயலாளர் பி.பி.ஈஸ்வரமூர்த்தி அவர்களுக்குப் பதிலாக திரு. **ந.பிரபு** (2/31, மெயின் ரோடு, மொரட்டுப்பாளையம் அஞ்சல், ஊத்துக்குளி 638 753) அவர்கள் ஊத்துக்குளி தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 22.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கோவை மாவட்டக் கழக மூத்த முன்னோடி –

# வெள்ளக்கிணறு பேரூராட்சி முன்னாள் தலைவர் வெ.நா.பழனியப்பன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 24 -

கோவை மாவட்டம் - வெள்ளக்கிணறு பேரூராட்சி முன்னாள் தலைவரும், கழகத்தின் மூத்த முன்னோடியுமான வெ.நா.பழனியப்பன் அவர்கள், உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவர் மறைவுற்ற செய்தியறிந்து துயருற்ற கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவரது மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து உருக்கமிகு செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கழகமே தனது வாழ்வென வாழ்ந்த கோவை மாவட்டம், வெள்ளக்கிணறு முன்னாள் கிளை கழகச் செயலாளர், ஒன்றிணைந்த சர்க்கார் சாமக்குளம் ஒன்றியக் கழகத்தின் செயலாளராக மூன்று முறை பதவி வகித்தவர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவராகவும் - பின்னர் மாவட்ட துணைச் செயலாளராகவும் பதவி வகித்தவர். தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், வெள்ளக்கிணறு பேரூராட்சி தலைவரென, கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்த கழகத்தின் மூத்த முன்னோடி, வெள்ளக்கிணறு வெ.நா.பழனியப்பன் அவர்கள் (வயது 84) உடல் நலக்குறைவால் 21.11.2025 - வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை 4.00 மணி அளவில் இயற்கை எய்தினார் எனும் செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

அன்னாரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், கழகத்தினர் அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் தொழில் மையம் சார்பில் நடைபெற்ற தொழில் மற்றும் புத்தொழில் கண்காட்சி தமிழ்நாடு சிப்காட் மேலாண்மை இயக்குநர் கி.செந்தில் ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் நகர செயலாளர்கள் நாட்டான் மாது, முல்லை ரவி மற்றும் துறை அதிகாரிகள்,ஏராளமான தொழில் முனைவோர் கலந்து கொண்டனர்.